## டிசம்பர் - 29

**"காலையிலே உன் விதையை விதை; மாலையிலே உன் கையை நெகிழவிடாதே; அதுவோ, இதுவோ, எது வாய்க்குமோ என்றும் இரண்டும் சரியாய்ப் பயன்படுமோ என்றும் நீ அறியாயே." - பிர 11 . 6.**

கர்த்தருடைய ஜனங்களில் எல்லோரும், சத்தியத்தின் ஊழியக்காரராவதற்குரிய விருப்பத்தின் அளவிற்கு சமமாக ஊழியத்திற்காகவுள்ள நல்ல தருணங்களைக் கவனிக்கத் தொடர்ந்து தயாராயுள்ள நிலையில் இருக்கவும், கர்த்தரால் நடத்தப்படவும் உபயோகிக்கப்படவும் எதிர்நோக்கி இருக்க வேண்டும். கர்த்தருக்கும் அவருடைய வார்த்தைக்கும் யாரிடமாவது பக்தியின் அத்தாட்சியைக் கொண்டோமானால், அவர்களுக்கு நம்முடைய உதவும் கரத்தை நீட்டத் தயாராயுள்ள நிலையிலிருக்க வேண்டும். நாம் பெற்றுக்கொண்டிருக்கிற ஆசீர்வாதங்களை மற்றவர்களுக்குக் கடத்த நாம் தயாராயுள்ள நிலையிலிருக்க வேண்டும். ராஜாதி ராஜனுக்கு ஊழியஞ்செய்ய பிரதிஷ்டை செய்திருக்கிறவர்கள், இதுவே தங்களுடைய ஜீவியதின் முக்கிய தொழிலாக இருக்கிறதென்பதை உயர்வாக மதிக்க வேண்டும்.

**- Z 02, 71 (R 2964).**

நாம் மற்றவர்களுடைய இருதயத்திலுள்ளதை அறியமுடியாது. தேவன் ஒருவரே இதைச் செய்யக்கூடும். ஆகையால், நாம் நீர்வளம் பொருந்திய இடங்களிலெல்லாம் விதைக்க வேண்டியவர்களாயிருக்கிறோம். நாம் இரண்டு வகுப்பாருக்கு மாத்திரம் பரிசுத்த காரியங்களையும், சத்தியத்தின் முத்துக்களையும், குணத்தின் முத்துக்களையும், தர மறுத்து விடவேண்டும். முதலாவது வகுப்பார், "நாய்கள்" நாய்களைப்போல, பல்லை நறநறவெனக் கடிக்கிறதும், நாய் குரைப்பதுபோல, குரைத்து நம்முடன் சண்டை போடுகிறவர்கள். இரண்டாவது வகுப்பார், "பன்றிகள்" பாவச்சேற்றில் புரளுகிறவர்கள். மற்ற எல்லோருக்கும் தேவனுடைய வார்த்தையின் தக்க பாகங்களைக் கொடுக்க வேண்டியவர்களாய் இருக்கிறோம். ஒரு முறையோ அல்லது இரண்டு முறையோ நாம் இதைச் செய்ய வேண்டுமென்றல்ல. சம்மந்தப்பட்டவர்களுடைய தேவைகளுக்குத்தக்கதாக, நம்முடைய சொந்த சௌகரியத்தைப் பொருட்படுத்தாமல் அநேகமுறை செய்ய வேண்டும். எந்தமுறை தேவனுடைய வார்த்தை ஏற்றுக்கொள்ளப்படும் என்றோ எந்த ஆள் ஏற்றுக்கொள்ளுவார் என்றோ நமக்குச் சொல்ல முடியாது. தேவன் புறக்கணித்தவர்களை நாம் அடிக்கடி கர்த்தரால் அபிஷேகம் பண்ணப்பட்டவர்கள் என்றோ, தேவன் ஏற்றுக்கொள்ளப்பட்டவர்களை அவருடைய அபிஷேகம் பண்ணப்பட்ட ஜனங்கள் அல்ல என்றோ, நாம் அடிக்கடி எண்ணுவதுண்டு. ஆகையால் தீர்ப்பளிப்பதில் நாம் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். தேவன் மாத்திரமே இருதயங்களை அறிந்து பிழையற்றவிதமாகத் தீர்ப்பளித்து, ஆவி, வார்த்தை, பராமரிப்பு இவைகளின் உரைக்கல்லினால், அவர்களுடைய மனப்பாங்கை வெளிப்படுத்துகிறார். குணங்கள் சுத்தமானவையா அல்லது கலப்பானவையா என்பதை இவைகள் நிரூபிக்கின்றன. ஆகையால் ஒவ்வொருவருடைய விஷயத்திலும் சரியாய் நிரூபிக்கும் அவருடைய சோதனைகளுக்காகக் காத்திருப்போமாக. **- P 32, 197.**

**ஒத்த வாக்கியங்கள் :-**

**ஆதி 49.24-26, சங் 1.3, 127.1,2, நீதி 11.18,19,30, ஏசா 58.6-14, 62.1, யோவா 18.37, 1கொரி 15.58, கலா 6.9, 2தீமோ 4.2,5.**

**கோபுர வாசிப்பு : Z 14, 197 (R 5489).**

**வினாக்கள் : இந்த வாரத்தில் நான் சத்தியத்தைப் பரப்பினேனா? எப்படி? ஏன்? பலன்கள் எவை?**